# மணப்பாறை நகராட்சி

**2020- ஆம் ஆண்டு ஜீலை மாதம் (19.08.2020) 29 – ஆம் தேதி புதன்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 19.08.2020 | **பொருள் – 1**<br>மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பொத்தமேட்டுப்பட்டி சர்வே எண் .1474ல், திரு.சின்னப்பன் என்பரால் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமணத்தினை , நகராட்சி நிர்வாகத்தினரால் அகற்ற உத்திரவிடக்கோரி , திருமதி.வின்செண்ட் மேரி என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் தொடர்ந்த வழக் கு W.P.No.7701/2020ல் வழங்கப்பட்டுள்ள உத்திரவில் , மனுதாரர் திருமதி.வின்சென்ட் மேரி, மணப்பாறை மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் (Principal District Munsif court , Manapparai) Execution Petition தாக்கல் செய்து உரிய பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தி, ரிட் மனுவை தள்ளுபடி செய்துள்ளது.<br>மேற்காணும் வழக்கில் மணப்பாறை நகராட்சி சார்பாக , உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ஜே.லாரன்ஸ் அவர்கள் சென்னை , உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நீதியரசர்கள் முன்பாக ஆஜராகி நகராட்சி தரப்பு (Standing Council ) வாதங்களை எடுத்துரைத்துள்ளார் . இவ்வழக்கில், நகராட்சி சார்பாக வாதாடியதற்காக வழக்கறிஞர் கட்டணம் ரூ .7500/- (ஏழாயிரத்து ஐநூறு மட்டும் ) வழங்கக்கோரி 31.07.2020 அன்று கடிதம் அனுப்பியுள்ளார் . இக்கட்டணத்தொகை ரூ .7500/-ஐ வழக்கறிஞர் திரு.ஜே.லாரன்ஸ் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு**<br>அனுமதிக்கலாம் (ந.க.எண்.1952/2020/எப்1) | **தீர்மான எண்.822**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 19.08.2020 | **பொருள் – 2**<br>இந்நகராட்சி பொது சுகாதார LCV இலகு ரக வாகனங்கள் TN45CZ 0358, TN45CZ0344, TN45CZ0327, TN45CZ0310, ஆகிய வாகனங்களுக்கு ஆயில் சர்வீஸ் செய் து பில்டர்கள் மாற்றம் செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ .7400/- பொது நிதியிலிருந்து செலவினம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு -** அனுமதிக்கலாம் (ந.க.எண்.1970/2020/எச்2) | **தீர்மான எண்.823**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 19.08.2020 | **பொருள் – 3**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு எண்.'E' பிளாக் 12, நகரளவு எண்.18, கதவிலக்கம் 6, ராயப்பன் தெரு , மஞ்சம்பட்டி என்ற இடத்தில் , திருமதி.சகாயமேரி என்பவரால் , நகராட்சியின் முன் அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் கட்டுமானத்திற்கு உரிய பரிகாரம் கோரி , நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களை முதல் பிரதிவாதியாகவும் , நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , தஞ்சாவூர் அவர்களை இரண்டாம் பிரதிவாதியாகவும் , மணப்பாறை நகராட்சி ஆணையாளர் அவர்களை இரண்டாம் பிரதிவாதியாகவும் சேர்த்து திரு .சவரிமுத்து த /பெ.ஆரோக்கியம் என்பவர் சென்னை உயர்நீதிமன் ற மதுரைக்கிளையில் தொடர்ந்த வழக்கு WP(MD) 9220/2020-ல் மணப்பாறை நகராட்சி ஆணையாளர் சார்பாக திரு .ஜே.லாரன்ஸ், வழக்கறிஞர் ஆஜராவதற்கு வழக்கு கட்டணம் ரூ.7500/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக்குறிப்பு</u>**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>(ந.க.எண்.2170/2020/எப்1) | **தீர்மான எண்.824**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 19.08.2020 | **பொருள் :4**<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந .க.எண்.857/2017/இ2 நாள்.19.06.2019 மற்றும் மின்னஞ்சல் கடிதம் நாள் .05.08.2020-ல் அறிவுறுத்தியுள்ளவாறு 15.08.2020 அன்று 74-வது சுதந்திர தின விழா கொண்டாட்டத்தில் சுகாதார பழக்க வழக்கங்களை முன்னிலைப்படுத்தும் வகையில் விளம்பர நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>எனவே நகராட்சி அலுவலகம், பேருந்து நிலையம், காமராஜர் சிலை அருகில், காந்தி சிலை அருகில் விளம்பர பதாகை 10'X5' அளவில் வைத்திட அனுமதியும் அதற்கான தோராய செலவினம் ரூ.4000/- விழிப்புணர்வு நிதியிலிருந்து (IEC) செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1261/2019/எச்2) | **தீர்மான எண்.825**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr><td>19.08.2020</td><td>

**பொருள் :5**

74-வது சுதந்திர தின கொண்டாட்டத்தின் போது விழிப்புணர்வு விளம்பர பதாகை வைக்க நிர்வாக அனுமதி பெறப்பட்டதன் பேரில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (பிளக்ஸ் ஒன்றுக்கு 10'X5') |
|---|---|---|
| 1. | நூர் டிஜிட்டல், மதுரை ரோடு, மணப்பாறை | 1000/- |
| 2. | கங்கா ஆப்செட் பிரிண்டர்ஸ் , 12D/1, மதுரைரோடு, மணப்பாறை. | 1100/- |
| 3. | பிரின்ஸி கம்ப்யூட்டர்ஸ் , ஆப்செட் & பிரிண்டர்ஸ் & ஜெராக்ஸ், 26, வண்டிப்பேட்டைதெரு, மணப்பாறை | 1300/- |

மேற்காணும் மூ ன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி (பிளக்ஸ் ஒன்றுக்கு ரூ.1000/-) வழங்கிய நூர் டிஜிட்டல் மணப்பாறை நிறுவன விலைப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக்குறிப்பு**</u>

அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1261/2019/எச்2)

</td><td>

**தீர்மான எண்.826**<br>**அனுமதிக்கப்பட்டது.**

</td></tr>
<tr><td>19.08.2020</td><td>

**பொருள் :6**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் .5 பகுதியில் அமைந்துள்ள உரக்கிடங்கில் மக்கும் குப்பைகள் நீங்கலாக மீதமுள்ள குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது. உரக்கிடங்கின் அளவு 1 ஏக்கர் மட்டுமே உள்ளது. இதனால் குப்பைகள் நிரம்பி உள்ளதால் தினசரி சேகரம் ஆகும் குப்பைகளை உரக்கிடங்கில் கொட்ட இயலவில்லை . எனவே Hitachi இயந்திரம் கொண்டு மேற்காணும் குப்பைகளை அகற்றி வாகனங்கள் செல்ல ஏதுவாக இடவசதி ஏற்படுத்திடவும், விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ .40,000/- (நாற்பதாயிரம் மட்டும் ) பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக்குறிப்பு**</u>

அனுமதிக்கலாம்

</td><td>

**தீர்மான எண்.827**<br>**அனுமதிக்கப்பட்டது.**

</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 19.08.2020 | **பொருள் :7**<br>இந்நகராட்சி பொது சுகாதார LCV இலகு ரக வாகனங்கள் TN45CZ 0358, TN45CZ0344, TN45CZ0327, TN45CZ0310, ஆகிய வாகனங்களுக்கு ஆயில் சர்வீஸ் செய்யவும் , பில்டர் மாற்றவும் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. | **தீர்மான எண்.828 அனுமதிக்கப்பட்டது.** |

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை LCV ஒன்றுக்கு |
|---|---|---|
| 1. | ஓம் முருகா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் , பைப்பாஸ் ரோடு , மணப்பாறை | 2000/- |
| 2. | ஸ்ரீமாரியம்மன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் , பைப்பாஸ் ரோடு , பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை | 2100/- |
| 3. | ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் , பைப்பாஸ் ரோடு , பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை | 1850/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மணப்பாறை விலைப்புள்ளியினை ரூ ,1850/- ஒரு LCV வாகனத்திற்கு) ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக்குறிப்பு**</u>

அனுமதிக்கலாம் (ந.க.எண்.1970/2020/எச்2)

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**